மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 19 இதழ் / Issue 2 பிப்ரவரி / Feb 2021

மேவிபோசேத்தும் நாமும்.. பக்கம் - 18



"கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து
ஜனங்கள் வந்து,
தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள்" [லூக்.13:29]

## உம்முடைய சமாதானத்தை எங்களுக்கு தாரும் (யோவா.14:27)



பிறப்பால் நான் **இந்தியன்.**

மொழியால், கலாச்சாரத்தால் நான் **தமிழன்.**

என் சொந்த தெரிந்தெடுப்பால், நம்பிக்கையால்

நான் **கிறிஸ்தவன்.**

இதுதான் என் **அடையாளம்.**

என் அடையாளம் என் **பிறப்புரிமை.**

இதற்கு விரோதமாக வரும் எந்தக்காரியமும் என்னைக் காயப்படுத்துகிறது, என்னை வேதனைப்படுத்துகிறது.

சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்து அவரது நித்திய சமாதானத்தை எனக்கு அருளவேண்டுமென்பதே என்னுடைய ஜெபம்.

எனக்கு மாத்திரமல்ல, என்னைப்போல மனஉளச்சலை அனுபவிக்கிற என் உடன் பிரஜைகள் அனைவரும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிக்கிறேன்.

## Give us Your peace (John 14:27)

I am an **Indian** by Birth.

I am a **Tamilian** by Language and Culture.

I am a **Christian** by my own Choice and Faith.

This is my **identity**.

My identity is my **birth right**.

When anything comes against it, it hurts and pains me.

It is my prayer that Jesus Christ, the Lord of Peace might grant me His everlasting Peace. Not only to me, but also to all my fellow citizens, who are disturbed as me.

**- Editor**



## என்னை சமாதானத்தின் கருவியாக்கும்

"ஆண்டவரே, பகைமை இருக்கும் இடத்தில் என்னை உம்முடைய சமாதானத்தின் கருவியாக உருவாக்கும். அங்கே நான் அன்பை விதைக்கிறவனாக இருக்கட்டும்"

(Lord, make me an instrument of thy peace when there is hatred, let me sow love)

**- அசிசிப் புனிதர் பிரான்சிஸ்**



**மலர் - 19 பிப்ரவரி - 2021 இதழ் - 2**

**பொருளடக்கம்**



| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 3 |
| 2. | எதைத் தெரிந்து கொள்ளப் போகிறோம்? | 6 |
| 3. | நம்முடைய ஆலயம் .... | 10 |
| 4. | அந்தியோகியா சபை | 11 |
| 5. | பார்ன் சுவாலோ (Barn Swallow) | 14 |
| 6. | மறைந்துவரும் கிறிஸ்தவ ஆலயங்கள் | 15 |
| 7. | மேவிபோசேத்தும் நாமும் | 18 |
| 8. | கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-15) | 21 |
| 9. | நீதிமானுடைய சந்ததி செழிக்கும் | 25 |
| 10. | ஊழியம் ஒரு போராட்டம் | 28 |
| 11. | செய்திகள் .... | 14,15 |



**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940
Website : www.wordofchrist.org

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
D.No.23-B, **"தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**"ஒரு சந்ததி அவரைச்சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்"**

**(சங்.22:30)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

என்னை ஆட்கொண்டவரும், நான் சேவிக்கிறவருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்,

ஆண்டவரின் படைப்பின் வரலாற்றைக் குறித்து வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் காண்கிறோம். படைப்பின் ஆறாவது நாளில்தான் ஆதாமையும், ஆதாமிலிருந்து ஏவாளையும் படைத்தார். திரித்துவ **"தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படி யேயும் மனுஷனை உண்டாக்குவோமாக"(ஆதி.1:26)** என்று ஆலோசனை செய்து, ஆழ்ந்த கவனம் செலுத்தி (Meticulous Care) மனுக்குலத்தின் முதல் பெற்றோரை உருவாக்கினார். இதை உணர்ந்த தாவீது "நான் பிரம்மிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்" என்று பாடி யுள்ளான் (சங்.139:14). சாயலைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் **மெய் யான நீதியையும் பரிசுத்தத்தையும்தான் தேவனுடைய சாயல்** என்று விவரித்துள்ளார் (எபே.4:24). அப்படியானால் அந்த மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் மனிதன் நிலைத்திருந்து வளர்ந்து தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பான வளர்ச்சியை எட்டவேண்டும் என்று

முன்குறித்திருக்கிறார் (Predestined) (ரோம.8:29). படைப்பில், ஆண்டவர் கொண்டிருந்த மேலான நோக்கத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

இந்த திருநோக்கம் ஆதாம் ஏவாள் என்ற குறுகிய வட்டத்திற்குள் மாத்திரம் அடங்கிவிடக்கூடாது என்பதற்காக **தேவபக்தியுள்ள, பரிசுத்த சந்ததி உரு வாக்கப்பட வேண்டும்** என்று அவரது நோக்கத்தை விசாலப்படுத்துகிறார். படைப்பின் நோக்கத்தை மல்கியா தீர்க்கதரிசி விவரிக்கும்போது "**ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே**" என்ற தேவ நோக்கத்தை உறுதிப்படுத்துகிறார் (மல்.2:15). ஆகவேதான் "**நான் பரிசுத்தர்,** ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" என்று இஸ்ரவேல் மக்களுக்குக் கூறியுள்ளார் (லேவி.11:45). இதைத்தான் அப்போஸ்தலனாகிய பேதுரு மேற்கோள் காட்டி தமது நிருபத்தில் 1 பேது.1:15,16ல் "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய இந்த தெய்வீக நோக்கம் (Divine Purpose) ஒரு கால எல்லைக்குள் நின்றுவிடக்கூடாது என்பதைச் கருத்தில் கொண்டு அது எதிர்கால சந்ததியாருக்கும் எட்டவேண்டும் என்று வாய்வழிச் செய்தியாகவும், எழுத்து வடிவில் புத்தகமாகவும் பரப்பப்பட சித்தம் கொண்டார். அக்கிரமத்தின் பெருக்கத்தால் ஆதாமின் சந்ததி நோவாவின் காலத்தில் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டது. அதற்குத் தப்புவிக்கப்பட்ட நோவாவின் சந்ததியிலிருந்து ஆபிரகாமை தமக்கென்று வேறுபிரித்து பரிசுத்த சந்ததியை உருவாக்கச் சித்தம் கொண்டார். ஆபிரகாம் ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து செயல்பட்டதை ஆண்டவரே சாட்சியளிப்பதைப் பாருங்கள். "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்"(ஆதி.18:19). **ஆபிரகாமைப்போல ஒவ்வொரு குடும்பத்தாரும் தன் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் "கர்த்தரின் வழியைக் (நோக்கத்தைக்) காத்து நடவுங்கள்" என்று கட்டளையிடும் (command) திறனுடையவர்களாக இருக்கவேண்டுமென ஆண்டவர் எதிர்பார்க்கிறார்**. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஒவ்வொரு பிள்ளைகளுக்காக கணக்கொப்புவிக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. கர்த்தர் பின் நாட்களில் மோசேயிடம் நான் சொல்லும் " இந்த வார்த்தைகளை நீ எழுது" என்று கட்டளையிட்டார் (யாத்.34:27). அவைகள் புத்தக வடிவாயின, ஆகவேதான் ஆண்டவர் யோசுவாவிடம் "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டு பிரியாதிருப்பதாக" என்று சொன்னார் (யோசு.1:8). எஸ்றா, நெகேமியா, போன்றோர் "நியாயப் பிரமாண புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை அவர்களுக்கு விளங்கப்பண்ணினார்கள்". **அப்பொழுது கேட்ட**

**மக்கள் உணர்வடைந்தவர்களாக அழுதார்கள் என்று காண்கிறோம்** (நெகே.8:8,9). **ஆண்டவருடைய வார்த்தைகள் சந்ததிதோறும் பரவி வேர்கொண்டன.**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்" (மாற்.1:15). அவர் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு அவர்களைப் பிரசங்கம் பண்ணும்படி அனுப்பிவைத்தார் (மாற்.3:14). ஆண்டவருடைய வார்த்தை உலகம் முழுவதும் பரவியது. **உலகம் இருக்குமளவும் அனைத்து சந்ததியினருக்கும் தேவனுடைய மகத்துவமும் தெய்வீக நோக்கமும் அறிவிக்கப்பட வேண்டுமென்பதே அவருடைய திருச்சித்தம்,** ஆனாலும் கடைசி காலத்தில் விசுவாச துரோகம் ஏற்படும் என்றும் (2 தெச.2:3), அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகுமென்றும் (மத்.24:12), கொடிய காலங்களின் விளைவாக ஆண்டவருக்கு விரோதமான காரியங்களின் செயல்பாடுகள் வெளிப்படுமென்றும் எச்சரிக்கையின் குரல்களைக் கேட்கிறோம் (2 தீமோ.3:1-5). ஆகவே நம்முடைய சந்ததியினரை ஆண்டவருடைய நோக்கம் நிறைவேற எவ்வாறு வழிநடத்துகிறோம் என்பதை ஆழ்ந்து சிந்தித்து செயல்படவேண்டிய கட்டாய காலகட்டத்திற்குள் வந்திருக்கிறோம்.

நமது சகல எண்ணங்களுக்கும் சகல செய்கைகளுக்கும் கணக்கொப்புவிக்கும் நாள் ஒன்று வருகிறது (பிர.3:17). அதே நாளில் நாம் நம்முடைய பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளைக் குறித்தும் நமது சந்ததியினரைக் குறித்தும் என்ன சொல்லப்போகிறோம்? **"இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" என்று சொல்லப் போகிறோமா** (ஏசா.8:18)அல்லது நீர் எனக்கு சுதந்திரமாக அல்லது ஈவாகத் தந்த கர்ப்பத்தின் கனியை **உமது நோக்கத்தின்படி தேவபக்தியுள்ள சந்ததியாய உருவாக்கத் தவறிவிட்டேன் என்று கண்ணீரோடு கையைப் பிசைந்து கொண்டு நிற்கப் போகிறோமோ** என்பதை உங்கள் சிந்தனைக்கு வைக்கிறோம். அன்று கையைப் பிசைந்து கொண்டிருப்பதைத் தவிர்க்க இன்றே இருகரம் கூப்பிக் கண்ணீரோடு அவரை நோக்கி மன்றாடுவோம். அப்பொழுது அவரது கண்களிலிருந்து கிருபை புறப்பட்டு வந்து நம்மைச் சந்திக்கும். நமது விண்ணப்பங்களுக்கு செவிகொடுத்து காரியங்களை வாய்க்கச் செய்வார். **"நான், கர்த்தர், எனக்குக் காத்திருக்கிற வர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்து கொள்வாய்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். "ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்" (சங்.22:30). அதனை நமது சந்ததியினருக்கு வாய்க்கச் செய்வாராக..

- கிறிஸ்துவின் பணியில், K.செல்வின் தங்கதுரை

# எதைத் தெரிந்துகொள்ளப் போகிறோம்?

**"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன்...ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு,...அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான்" (உபா.30:19,20).**

மோசே இஸ்ரவேல் மக்களுடன் செய்த 40 ஆண்டு வனாந்தர பயணம் முடிவடைகிறது. இப்போது மோசேயின் வயது 120. 40ஆண்டுகள் தம்மக்களை வழி நடத்தின மோசே, அவர்களுக்கு அறிவுறுத்தின பிரிவு உபசார (Farewell) வார்த்தைகள் இவை எனச் சொன்னால் பொருத்தமாயிருக்கும். பயண கால முழுவதும் இந்த மக்கள் மறுபடியும், மறுபடியும் பாவம் செய்வதும், ஒவ்வொரு தடவையும் ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்பதும் இவர்களின் இயல்பான சுபாவமாக இருந்துள்ளதை மோசே நன்கு அறிந்திருந்தான். இதுபோல, மக்கள் பாவம் செய்த போதெல்லாம் எரிச்சலுள்ள தேவனாகவும், மன்னிப்பு கேட்டபோதெல்லாம் மனதுருகி மன்னிக்கிறவராயும் இருக்கிற யெகோவா என்பதையும் அறிந்திருந்தான்.

இந்த பின்புலத்தில் தான். இனி மேலாவது தம் மக்கள் நிரந்தரமாக ஜீவனை தெரிந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய், தம் பின் சந்ததிக்கு ஆசீர்வாதத்தை வைத்து போகிறவர்களாய் வாழ வேண்டும் என்ற வாஞ்சையின், எதிர்பார்ப்பில் இந்த அழைப்பை / அறிவுறுத்தலை அவர்கள் முன் வைக்கிறான்.

## மோசேயின் கண்ணோட்டத்தில் கடவுளின் கட்டளைகள்

கடவுளின் கட்டளைகள், தம் மக்கள் பாவத்திலிருந்தும், பொல்லாத வழிகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளச் செய்யும் வழிகாட்டியாகவே கருதினான். மனிதனின் அழிவுக்காக அல்ல. மாறாக இரட்சிப்பை தெரிந்து கொள்ள, கொடுக்கப்பட்ட வாக்குகளாக கருதினான். தம் சாயலில் படைக்கப்பட்ட மக்கள் அவரை போலவே வாழ்வதற்கு ஏதுவாக கட்டளைகளை கொடுத்தார் என்பதை தன் வாழ்வில் உணர்ந்ததாலேயே, தம் மக்களை விட்டுப் பிரியும் வேளை வந்தபோது தன் ஆடுகளை, ஜீவனை, தெரிந்து கொள்ளும்படி, அழைப்பு விடுக்கிறான். மோசே, இஸ்ரவேல் மக்களுக்கு விடுத்த இந்த அன்பின் அழைப்பு இன்று நமக்கும் கொடுக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ள அழைக்கப்படுகிறோம். நாம் அன்றாட வாழ்வில் - நாம் செய்யும் தீர்மானங்கள் - சில தீர்மானங்கள் தினமும் நாம் எடுத்துக் கொள்ளும் உணவு, உடுத்தும் உடை, செய்யும் பணி, செல்லும் இடம், சந்திக்க நினைக்கும் நபர்கள் போன்றவை சாதாரண தீர்மானமாகும். சில வேளைகளில், முதலீடு செய்தல், திருமணம் செய்தல், சரியான

படிப்பை, சரியான வேலை தெரிந் தெடுத்தல் போன்ற பொறுப்புள்ள தீர்மானங்களையும் செய்கிறோம். இவை யோசித்து எடுக்க வேண்டிய தீர்மானங்கள்தான். ஏனெனில் இவை ஒரு அளவுக்கு நேர்மறை அல்லது எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். ஆனால் இவை எதுமே ஜீவனா, மரணமா, ஆசீர் வாதமா, சாபமா, என்கிற தீர்மா னங்கள் அல்ல. இவைகளை யெல்லாம் இந்த உலக வாழ்வோடு தொடர்புடையவை. மேலெழுந்தவாரி யாக பார்த்தால், மரணத்தை தவிர்த்து, ஜீவனை தெரிந்து கொள் என்கிற அறி வுரை அர்த்தமற்றதாய் தோன்றும். ஏனெனில் மரணத்தை யார்தான், தழுவிக் கொள்ள விரும்புவர்?

**அப்படியானால் மோசே தெரிந்து கொள்ளச் சொன்ன 'ஜீவன்' என் றால் என்ன? அது எதைக் குறிக்கிறது?**

**கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து அவர் வழிகளில் நடந்து அவர் கற்பனைகளையும், கட்டளை களையும் கைக்கொள்ளும்படியான வாழ்வை தெரிந்து கொள்ளுதலே, ஜீவனைத் தெரிந்து கொள்வதாம்.** இந்த ஜீவன் கடவுளுடைய திட்டத் தையும், சித்தத்தையும், நிறைவேற்ற முனையும் ஒன்றாகும். இந்த ஜீவன் கடவுள் நம்மில் காண விரும்பும் நித்தியத்துக்கேதுவான வாழ்வு. இந்த ஜீவனைத் தெரிந்து கொள்வதில், தவறியவர்களாக, நாம் பலரும் இருக் கிறோம். இதனால்தான் பரிசுத்த வான்கள் மிகக்குறைந்தே காணப்படு கிறார்கள். நீங்கள் மரித்தால் எங்கே போக விரும்புவீர்கள் என்று ஒரு நண்பரிடம் கேட்டேன். சற்றும் யோசிக்காமல் நரகத்தில்தான் அதிக மான பேரை சந்திக்கலாம். முக்கிய கிறிஸ்தவ புள்ளிகளைக் கூட சந்திக் கலாம். ஆகையால் அங்கே செல்லவே விரும்புவேன் என்று கூறினார். இந்த உலக வாழ்வில் கடவுள் விரும்பும், ஜீவனைத் தெரிந்து கொள்வது சாத்தியப்படாது என்ற எண்ணமே, அவர் தந்த பதிலுக்கு காரணம் எனலாம். மோசே, குறிப்பிடுகிற ஜீவன் சாத்தி யமா என்கிற கேள்வி நம் முன் னாலும் நிற்கத்தான் செய்கிறது. இதற்கு நமது வேதாகமம் தரும் பதில்: வேதாகமத்தில் நாம் படிக்கிற பல கதாபாத்திரங்கள், அறிவுறுத்துகிற ஜீவன் சாத்தியமே, சாத்தியமே என்று தன் வாழ்வின் மூலம் உரத்த குரலில் சுட்டிக்காட்டுவதை, நாம் காண முடிகிறது.

குறிப்பாக யோசேப்பு, தானியேல் போன்றவர்களின், வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமை வதைப் பார்க்கிறோம். அது பற்றிய பார்வை இதோ.

**1. ஜீவனைத் தெரிந்து கொண்ட யோசேப்பு:**

போத்திபார், பார்வோன் மன்னனின் பாதுகாவலன். இவன் யோசேப்பை அடிமையாக விலைக்கு வாங்கி, தன் வீட்டு காரியங்களை எல்லாவற் றையும் கவனித்துக் கொள்ளும் கண் காணியாக நியமிக்கிறான். போத்தி

பாரின் மனைவி சுலேகா யோசேப்பின் மூலம் தனது சரீர இச்சைகளை நிறைவு செய்ய நிர்ப்பந்திக்கிறாள்.

தனது சொந்த சகோதரர்களே தன்னை குழியில் போட்டதிலிருந்து பல வழிகளிலும் சோதனைகளையும், துன்பத்தையும் கண்ட யோசேப்பு, இதை ஓர் அரிய வாய்ப்பாக கருதி இருக்கலாம். ஆனால் அத்தருணத்தில் அவன் முன் இருந்த இரண்டு பெரிய கேள்விகள்:

1. சுலேகாவால் ஆசைக்கு உடன்பட்டு அதினால் வரும் சகல ஆதாயங்களையும் பதவி உயர்வும் பெற்று நன்றாய் வாழலாம் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுத்து இசைந்து போவதா (அல்லது)

2. மறுப்பு தெரிவித்தால், அவளுடைய கடும் கோபத்துக்குள்ளாகி கடும் தண்டனை பெற்று துன்பத்துக்குள்ளாக்கிக் கொள்வதா என்ற இரண்டு நிலை.

வேதம் இப்படி சொல்கிறது. ஆதி.39:9இல் நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான். அவனுக்கு ஏற்பட்ட கடினமான சூழ்நிலையை மேற்கொண்டவனாய், அதிலிருந்து தப்பி ஓடினான் என்று பார்க்கிறோம். ஆம், யோசேப்பு தற்காலிகமான சரீர இன்பத்திற்கு பதிலாக நிரந்தரமான நித்திய வாழ்வைத் தேடினவனாய் கடவுள் விரும்பும், ஜீவனைத் தெரிந்து கொண்டான் என காண்கிறோம். **யோசேப்பு இப்படி தேர்வு செய்ததின் வழியாக தனக்கும் தன் சந்ததிக்கும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்கிறதைக் பார்க்கிறோம்.** வாலிப நாட்களில் யோசேப்புக்கு நேர்ந்த சோதனையை விட பெரிய சோதனை யாருக்கும் நேரிட முடியாது. ஆனால் யோசேப்பு அதில் ஜெயம் எடுக்கிறான்.

எந்த கடினமான நிர்பந்தமான சோதனை வேளையிலும் ஜீவனை தெரிந்து கொள்ள முடியும். அது சாத்தியம் என்பதை யோசேப்பின் தெரிந்து கொள்ளுதல் நமக்கு ஓர் சிறந்த முன் மாதிரியாக காண்பிக்கிறதல்லவா. நாம், நமக்கு வரும் சூழ்நிலைகளை எப்படி மேற்கொள்கிறோம்? மோசே அறிவுறுத்தும், ஜீவனைத் தெரிந்து கொள்ளும் வாஞ்சை நமக்கு உண்டா?

## தானியேல் தரும் பாடம்

தானியேல் ஒரு எபிரேயன். அடிமையாக பாபிலோனுக்கு கொண்டு செல்லப்படுகிறான். தானியேலிடம் விசேஷ ஆவியிருந்ததை உணர்ந்த தரியு மன்னன், எல்லா அதிபதிகளுக்கும் மேலான அங்கீகாரத்தையும் பதவியையும் கொடுத்ததால், அதைக் கண்டு பொறாமைப்பட்ட மற்ற அதிகாரிகள், தானியேலிடத்தில் ஏதாவது குற்றம் காண திட்டம் செய்கிறார்கள். தானியேல் தன் கடவுளை வணங்குகிறான் என்பதைத் தவிர வேறு முகாந்திரம்

காண முடியாமல் அந்த காரியத்தில் அவனை குற்றப்படுத்த நினைக் கிறார்கள்.

தரியு மன்னனைத் தவிர வேறு எந்த நபரையும், கடவுளையும் வணங்குகிற எவனும் சிங்கங்களின் கெபியில் போடப்பட வேண்டும் என்ற கட்டளையை மன்னன் பிரகடனம் செய்கிறார். ஆனாலும் இதை அறிந்தும், தொடர்ந்து முன் செய்தது போலவே மூன்றுவேளையும் ஜெபம் பண்ணி கடவுளைத் துதிக்கிறான். ராஜாதி ராஜா, தேவாதி தேவனை வணங்கி மகிழ்ந்த தானியேலுக்கு வேறு யாரையும் வணங்க மன தில்லை. நடந்தது நமக்குத் தெரியும். சிங்கங்களின் குகைக்குள் தள்ளப்படு கிறான். எவ்வித சேதமுமின்றி காக்கப்படுகிறான்.

இப்படி மோசே குறிப்பிடுகிற ஜீவனைத் தெரிந்து கொண்டதால் தானியேல் தன்னையும் தன் விசு வாச வாழ்க்கையையும் காத்துக் கொண்டான். அது மாத்திரமல்ல, அது மன்னனின் ஆவிக்குறிய வாழ் விலும் அவனுடைய இராஜ்ஜியத் திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி யதைப் பார்க்கிறோம். என் ராஜ்யத் தின் ஆளுகைக்குள் எங்குமுள்ள வர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டும் என்று என்னாலே, தீர்மா னிக்கப்படுகிறது என்றும் தானி யேலில் தேவனைப்பற்றி சாட்சியும் பகர்கிறதைப் பார்க்கிறோம் (தானி.6:26).

கடுமையான எதிர்மறைச் சூழலின் மத்தியிலும் (தானியேல் சிறு பான்மை இனத்தை சேர்ந்தவனாக இருந்த நிலையிலும்) கடவுளுக்கு உண்மையாயிருக்க முடியும். புற ஜாதிகளுக்கும் நம் கடவுளை தொடர்பு படுத்த முடியும் என்கிற அருமையான சாட்சியின் வாழ்வை தானியேல் முன் மாதிரி நமக்குக் காட்டுகிறதல்லவா?

இவ்வாறு யோசேப்பு, தானியேல் - இவ்விருவரின் வியத்தகு முன் மாதிரிகள், நாமும்கூட இந்த உலக வாழ்வில், ஜீவனை தெரிந்து கொள் வது, சாத்தியமே என்றும், அதுவே நம் வாழ்வில் கடவுள் விரும்பும் காரியம் என்பதும் திட்டத் தெளிவாகிற தல்லவா? கடவுள் எப்போதுமே நமக்கு ஜீவனைத்தான் தர விரும்பு கிறார். எனினும் அதை நம்மேல் கட்டாயப்படுத்துகிறவர் அல்ல. தீர்மா னிப்பதும் தேர்ந்தெடுப்பதும் நம் பொறுப்பு. **நீங்கள் எடுக்கும் முடிவு தான் நீங்கள் சென்றடையும் இலக்கை நிர்ணயிக்கும் (Your decision determines your destiny).**

இதை வாசிக்கும் நண்பர்களே, நம்மு டைய தெரிந்தெடுப்பு என்ன? “அவரே உனக்கு ஜீவனும், தீர்க்காயுசுமான வர்” உபா.30:20.ஆமென்! ஆமென்!

**- Dr. J. Johnson Sundararaj, Ph.D.**
Former Vice-Principal,
American college,
Mo: 9843680054

# நம்முடைய ஆலயம் சகல ஆத்துமாக்களின் ஆலயம்தானா?

சில ஆண்டுகளுக்கு முன்பாக அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் **"சகல ஆத்துமாக்களின் ஆலயம்"** (All Souls Church) திடீரென்று பூட்டப்பட்டது. ஏனெனில் அந்த சபையின் போதகர், கறுப்பு அமெரிக்கர்களும் இனி இங்கு வந்து ஆண்டவரை ஆராதிப்பார்கள் என்று ஒரு அறிவிப்பு கொடுத்தார். அந்த சபையிலிருந்த சில அமெரிக்கர்கள் கறுப்பு இனத்தவரோடு சேர்ந்து ஆராதிப்பதை விரும்பவில்லை. ஆகவே தனியாக ஆராதிக்க விரும்பினார்கள். இதன் விளைவாக ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக ஆலயம் பூட்டப்பட்டது. ஆனால் பிஷப் மேனிங் (Bishop Manning) 200 கறுப்பு அமெரிக்கர்களுடன் ஆலயத்திற்கு வந்து பூட்டை உடைத்து ஆலயத்தைத் திறந்து ஆராதனை நடத்தினார். அப்பொழுது பிஷப் "இந்த ஆலயத்தை சகல ஆத்துமாக்களின் ஆலயம் என்பதைவிட சில ஆத்துமாக்களின் ஆலயம் (Some Souls Church) என்று மாற்றிவிடலாம்" என்று சொன்னார். **- தகவல்: "வாழ்வில் வார்த்தை"**

"பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவித மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது" என்று வேதம் சொல்லுகிறது (மத்.13:47). **நிறத்திற்கும், மதத்திற்கும், ஜாதிக்கும் முக்கியத்துவம் கொடுப்போருக்கு** (Colour, Creed and Caste) **பூலோகத்திலுள்ள ஆலயத்தில் இடம் கிடைக்கலாம். ஆனால் பரலோகத்தில் இடம் கிடைக்காது.**

இன்றும் நம்முடைய நாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு ஆலயமும் அதே ஊரில் வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு ஆலயமும் இருக்கத்தானே செய்கின்றன. ஆனால் இயேசுகிறிஸ்து **"என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு"** என்பதை ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்த (ஏசா.56:7) காரியத்தையும் நினைப்பூட்டுகிறார். அதைத் தொடர்ந்து இயேசுகிறிஸ்து, "நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" என்று எரேமியா தீர்க்கதரிசி (எரே.7:11)ல் சொன்னதைச் சுட்டிக் காட்டி அவர்கள் மீது பெரிய குற்றச்சாட்டை வைக்கிறார். நம்முடைய ஆலயம் எப்படி இருக்கிறது? ●

---

**"உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை,ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்"** (கலா.3:27,28).

# அகதிகளால் ஆரம்பிக்கப்பட்ட அந்தியோகியா சபை

ஆதித்திருச்சபை எருசலேமில் 120 சீஷர்களால் உருவானது (அப்.1:15). இதர திருச்சபைகள் பிலிப்பு, பேதுரு, பவுல், பர்னபாவால் சந்திக்கப்பட்டு சீடர்களாக எழும்பிய விசுவாசிகளால் தொடங்கப் பெற்றன (அப்.8:5,8; 10:24,44). ஆனால் அந்தியோகியா சபை அப்படியின்றி, பெயர் குறிப்பிடப்படாத அகதிகளால் ஆரம்பிக்கப்பெற்ற சபையாகும் (அப்.11:19-20).

திருவாளர் F.W.கிராண்ட் இதைக் குறித்து, "இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் தற்பெருமை சிறிதேனும் இல்லை. அவ்வூழியத்தை நிறைவேற்றிய மனிதர்களில் ஒருவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை. இது எத்தனை மேன்மை வாய்ந்தது" என்று கூறுகிறார். கிறிஸ்தவம் அந்தியோகியாவிற்கு அறிமுகப் படுத்தப்பட்ட நிகழ்ச்சி, சபையின் முன்னேற்றப் பாதையில் ஒரு முக்கியமானபடியாகும்.

பாலஸ்தீனத்திற்கு வடக்கே அமைந்திருந்த சிரியா நாட்டில் ஓரண்ட்ஸ் என்னும் ஆற்றுப்படுகையில் இருந்த அந்தியோகியா பட்டணம், ரோமப் பேரரசில் மூன்றாவது நகரமாகவும், "பண்டைய உலகின் பாரிஸ் மாநகரம்" என்றும் சிறப்புப் பெயர் பெற்றிருந்தது. இங்கிருந்து தான் பவுலும் உடன் ஊழியரும் மிஷனரிப் பயணங்களைத் தொடங்கினார்கள். அப்பயணங்களின் வாயிலாக நற்செய்தி புறவினத்தாருக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

### 1. உபத்திரவத்தினால் உருவான அந்தியோகியா சபை (அப்.11:19,20)

ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டபின் (அப்.7:58-60), எருசலேமில் சீடர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தினிமித்தம் சீடர்கள் சிதறடிக்கப்பட்டனர். அந்த நேரத்தில் குறைந்தது ஒரு பதினைந்தாயிரம் சீடர்களாவது இருந்திருக்க வேண்டும். ஒரு சிறிய கணக்கு: அப்.1:15-ல் - 120, அப்.2:41ல் - 3000, அப்.4:4ல் - 5000, அப்.5:14ல் திரளான புருஷர்களும், ஸ்தீரிகளும் (எண்ணமுடியவில்லை). அப்.8:1ல் அப்போஸ்தலர் தவிர இதர சீடர்கள் அனைவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறடிக்கப்பட்டனர்: அப்.8:5-ல் பிலிப்பு (பந்தி விசாரிக்கும் எழுவரில் ஒருவன் அப்.6:5) சமாரியாவிற்கு சென்று அங்கே சுவிசேஷம் அறிவித்தான், அப்.11:19-ல் சிதறடிக்கப்பட்டவர்கள் பெனிக்கேநாடு, சீப்புரு தீவு மற்றும் அந்தியோகியா பட்டணம் வரை சுற்றித்திரிந்து அங்குள்ள யூதர்களுக்கு வசனத்தைப் பிரசங்கித்தனர். ஆகவே இந்த சபை உபத்திரவத்தினால் சிதறடிக்கப்பட்ட சீடர்களின் முயற்சியால் உருவானது.

### 2. பெயரிடப்படாத சீடர்களால் உருவான அந்தியோகியா சபை (அப்.11:20)

சிதறடிக்கப்பட்ட யூதக் கிறிஸ்தவர்கள் பெனிக்கே நாடு, சீப்புருதீவில் உள்ள யூதர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தனர் (அப்.11:19). சீப்புருதீவார், சிரேனே பட்டணத்தாருக்கு சுவிசேஷம் அறிவித்திருக்க வேண்டும் (அப்.11:20). சிரேனே பட்டணத்தாரும், சீப்புரு தீவார் சிலரும் அந்தியோகியா வரை சென்று சுவிசேஷம் அறிவித்தனர். அந்தப் பெயரிடப்படாத சிரேனே மற்றும் சீப்புரு தீவில் உள்ள சீடர்களால் ஆரம்பிக்கப்பட்ட சபையே இந்த அந்தியோகிய சபையாகும்.

### 3. அந்நிய ஜாதியார் நிறைந்த அந்தியோகியா சபை (அப்.11:20)

அப்.11:20-ம் வசனம் இவ்வாறு சொல்லுகிறது, சீப்புருதீவாரும், சிலர் சிரேனே பட்டணத்தாருமாகிய அந்தியோகியாவில் இருந்த கிரேக்கருக்கு கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள். அந்தியோகியாவில் இருந்தவர்கள் அனைவரும் புறஇன மக்களான கிரேக்கர்கள் ஆவர்.

### 4. ஆண்டவரின் கிருபை நிலைத்திருந்த அந்தியோகியா சபை (அப்.11:23)

அந்தியோகியா பட்டணத்தார் விசுவாசிகளானதைக் குறித்து கேள்விப்பட்ட எருசலேம் சபையார், பர்னபாவை அந்தியோகியாவுக்கு அனுப்பினார்கள். அந்தியோகியா வந்த பர்னபா அந்த மக்களிடம் ஆண்டவருடைய கிருபை நிலைத்திருப்பதை கண்கூடாகக் கண்டார். எனவே, கர்த்தரிடத்தில் மனஉறுதியாய் நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்தி சொன்னார்.

### 5. அநேக ஜனங்களை கர்த்தரண்டை சேர்த்த அந்தியோகியா சபை (அப்.11:24)

நல்லவனும், பரிசுத்த ஆவியினாலும், விசுவாசத்தினாலும் நிறைந்த பர்னபாவின் தலைமைத்துவம் புதிதாகத் தோன்றிய அந்தியோகியா சபை மக்களுக்கு கிடைப்பது எவ்வளவு சிறந்தது! அதனால் அந்தியோகியாவில் அநேக ஜனங்கள் தொடர்ந்து சந்திக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டு கர்த்தரிடமாய் சேர்க்கப்பட்டனர்.

### 6. ஆண்டவரின் உபதேசம் பிரசங்கம்பண்ணப்பட்ட அந்தியோகியா சபை (அப்.11:25,26)

இந்த சபையின் தலைமைத்துவத்தில் இருந்த பர்னபா தர்சுப் பட்டணத்து சவுலை அந்தியோகியாவுக்கு அழைத்துவந்தார். பர்னபாவும், சவுலும் கிட்டத்தட்ட ஒரு வருஷ காலமாக அந்தியோகியா பட்டணத்தில் உள்ள திருச்சபைக்கு இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை பிரசங்கித்து வந்தனர்.

### 7. ஆண்டவரின் சீடர்களுக்கு அடையாளத்தைக் கொடுத்த அந்தியோகியா சபை (அப்.11:26)

பவுலும், பர்னபாவும் தலைவர்களாக இருந்து ஊழியம் செய்து வந்த இந்த அந்தியோகியாவில் சீடர்களுக்கு ‘‘கிறிஸ்தவர்கள்’’ (‘கிறிஸ்து‘ அவர்கள்)

என்ற அடையாளம் கொடுக்கப் பட்டது.

**8. தயாளர்களால் நிறைந்த அந்தியோகியா சபை (அப்.11:29,30)**

"உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும்" என்று அந்தியோகி யாவுக்கு வந்த அகபு என்ற தீர்க்க தரிசியால் அறிவிக்கப்பட்டபோது, அந்தியோகியாவில் உள்ள சீடர்கள் அவரவர் திராணிக்குத்தக்கதாக யூதே யாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணம் சேகரித்து பர்னபா, சவுல் மூலம் எருசலேம் சபை மூப் பர்களுக்கு அனுப்பினார்கள்.

**9. ஆவிக்குரிய தலைவர்களை தன்னகத்தே கொண்ட அந்தி யோகியா சபை (அப்.11:1)**

அந்தியோகியா சபையில் ஜனங் களை வழிநடத்த பர்னபா, நீகர் என்னப்பட்ட சிமியோன், சிரேனே ஊரானாகிய லூகி, காற்பங்கு தேசாதி பதியாகிய ஏரோதுடனேகூட வளர்க் கப்பட்ட மனாயீன், சவுல் என்னப்பட்ட பவுல் ஆகிய ஆவிக்குரிய தலை வர்கள் இருந்தனர்.

**10. ஆண்டவரை ஆராதித்த அந்தியோகியா சபை (அப்.13:2)**

ஆண்டவரை ஆராதிக்கும் காரி யத்தில் அந்தியோகியா சபை சிறந்து விளங்கியது. அந்தியோகியா சபை யார் தங்கள் தலைவர்களுடன் சேர்ந்து அடிக்கடி உபவாசித்து கர்த்தரை ஆராதித்தார்கள்.

**11. ஆண்டவரின் பணிக்கு ஆட்களை அனுப்பிய அந்தி யோகியா சபை (அப்.13:2-3)**

அந்தியோகியா சபையில் இயேசு வின் நேரடி அப்போஸ்தலர்களுடைய தலைமை எதுவும் இல்லை. ஆயினும் அவர்கள் பர்னபா மற்றும் சவுலின் தலைமையில் நன்கு விசு வாசத்தில் வளர்க்கப்பட்டிருந்தனர். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட, வேகமாக வளரக்கூடிய சபை, பர்னபாவையும் சவுலையும் இழப்பது ஒரு பெரிய இழப்பாகவே இருந்தாலும், கர்த்தர் தாம் அழைத்த ஊழியத்திற்காக அவர் களைப் பிரித்து அனுப்பும்படி ஆவி யானவர் மூலம் திருவுளம் பற்றிய போது (அப்.13:2) அவர்கள் உடனே கீழ்ப்படிந்து ஆண்டவரின் பணிக்கு ஆட்களை அனுப்பினர். அப்.1:8-ல் ஆண்டவர் சொல்லிய 'எருசலேம், யூதேயா, சமாரியா, உலகின் கடை முனை' ஆகிய நான்கு பகுதிகளில் இயேசுவுக்கு சான்று பகர்தல் மற்றும் நற்செய்தி அறிவிக்கும் திட்டத்தில் முதல் மூன்றுபகுதியை ஆதித்திருச் சபையான எருசலேம் சபை நிறை வேற்றியது. நான்காம் பகுதியான 'உலகின் கடைமுனை' என்பதை இந்த இரண்டாவது திருச்சபையான அந்தியோகியா திருச்சபை நிறை வேற்றியது என்றால் அது மிகையா காது. ஒவ்வொரு திருச்சபையும் அந்தியோகியா சபையைப் பின்பற்றி ஊழியம் செய்தால் நிச்சயம் நாம் 'உலகின் கடைமுனை' வரை நற்செய்தியை எடுத்துச் செல்வது சாத்தியமே!

**- பாஸ்டர். சாம் ராமலிங்கம்**

Mo: 8610844461



# பார்ன் சுவாலோ

## ஆறறிவை மிஞ்சும் ஐந்தறிவிப் பறவை

அர்ஜென்டினாவில் இருந்து பார்ன் சுவாலோ (Barn Swallow) என்ற சின்னஞ்சிறு பறவையினம் தனது இனப்பெருக்கத் திற்காக, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் புறப்பட்டு, 8300 கி.மீ., பயணம் செய்து மார்ச் இறுதியில் கலிபோர்னியா சென்றடைகிறது. கலிபோர்னியாவில் உள்ள கேபிஸ் டிரானோ தேவாலயப் பகுதியில் தங்கி இனப்பெருக்கம் முடிந்த பின், தங்கள் புதிய தலைமுறைகளோடு அக்டோபரில் புறப்பட்டு மீண்டும் 8300 கி.மீ.,பறந்து அர்ஜென்டினாவுக்குச் செல்கின்றன. இனப்பெருக்கத்திற்காக சில ஆயிரம் கி.மீ.,பறப்பது பறவைகளுக்கு இயல்பான விஷயம். இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது என்று நினைக்கலாம்?

ஆச்சரியம் உண்டு! பார்ன் சுவாலோ பறவை இனம், அர்ஜென்டினாவில் இருந்து கலிபோர்னியாவுக்கு வந்து போக, பறந்து செல்லும் 16,600 கி.மீ., தூரத்தில் எங்கும் நிலப்பரப்போ, மலைப்பரப்போ கிடையாது! கடற்பரப்பின் மேல் தான் பறந்தாக வேண்டும். அப்படியானால் பசி எடுத்தால் அவை எப்படி இரை தேடும்? களைப்படைந்தால் அவை எப்படி ஓய்வு எடுத்துக் கொள்ளும்? அவைகள் அர்ஜென்டினாவில் இருந்து புறப்படும்போது, சிறுகுச்சி ஒன்றை அலகில் கவ்விக் கொண்டு பறக்கின்றன. எப்பொழுதெல்லாம் அவற்றிற்குப் பசியும் களைப்பும் ஏற் படுகின்றதோ, அப்பொழுதெல்லாம் அவை கடல் பரப்பிற்கு தாழ்வாகப் பறந்து வந்து அலகில் கவ்விய குச்சியை கடல் பரப்பின் மேல் போட்டு அந்தக் குச்சியை தன் கால்களால் இறுகப்பற்றிக்கொண்டு அதன் மீது நின்று கொண்டு இரை தேடிக் கொள்கின்றன; ஓய்வெடுத்துக் கொள்கின்றன. பார்ன் சுவாலோ பறவைக்கு ஒரு சிறுகுச்சி 16,600 கி.மீ., பறப்பதற்கான வாழ்வாதாரமாக இருக்கிறது என்றால், கையும் காலும் ஐம்புலன்களும் ஆறறிவும் பெற்ற மனிதனுக்கு, வாழ்க்கையை முன் னெடுத்துச் செல்ல வாழ்வாதாரம் கிடைக்காமலா போகும். ஒரு சிறு பறவைக்கு இருக்கும் மனஉறுதியும் எதிர்நோக்கும் திட்டமும் நமக்கு இல்லையா?

**சிந்தனைக்கு..**

ஆண்டவரின் சிருஷ்டிப்பின் மேன்மை நமது சிந்தனைக்கு எட்டாதததா யிருக்கிறது. ஆனால் சிருஷ்டிப்பிலேயே அவைகளுக்கு இவை முன் நிர்ணயம் செய்யப்பட்டுயிருக்கிறது. வேதம் சொல்லுவதைப் பாருங்கள். “ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்” (எரே.8:7). நாம் காலத்தை அறியவில்லையே என்று ஆண்டவர் அங்கலாய்க் கிறார். இது ஆண்டவர் வருங்காலம். இடம்பெயர்ந்து அவரோடு செல்ல ஆயத்தப்படுவோம். நன்றி: தகவல் TRC No. 1111 ●

# மறைந்துவரும் கிறிஸ்தவ ஆலயங்கள்

**"நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்" (ஓசி.4:6)**

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ மிஷனெரிகள் குறிப்பாக 18, 19ம் நூற்றாண்டுகளில் உலக நாடுகள் முழுவதற்கும் பரவிச் சென்று கிறிஸ்தவத்தை விதைத்து வளரச் செய்தார்கள். அப்பணியோடு நின்றுவிடாமல் அறியாமையில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்குக் கல்வியை ஊட்டி வளர்த்தார்கள். பல்வேறு தொற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தவர்களுக்கு ஆரோக்கியமாக வாழ மருத்துவ வசதிகளை உருவாக்கிக் கொடுத்தார்கள். மூடநம்பிக்கையில் மூழ்கிக்கிடந்தோரை அவற்றிலிருந்து தூக்கி நிறுத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்கள். எப்படியும் வாழலாம் என்ற மனநிலையிலிருந்த மக்களை ஒழுக்கநெறிகளுக்குத் திருப்பினார்கள். அவர்கள் தங்களைத் தியாகம் செய்து ஆற்றிய நற்பணியின் கனிகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

ஆனால் அவ்வாறு நற்பணிகளை ஆற்றிய நாடுகளில் குறிப்பாக இங்கிலாந்து போன்ற நாடுகளின் இன்றைய நிலை என்ன என்பதைக் குறித்து சமீபத்தில் வாட்ஸ்ஆப் செய்தி மூலமாக அறிந்த தகவலின் அடிப்படையில் இச்செய்தியை தொகுத்தளிக்கிறோம்.

கிறிஸ்தவத்தின் இன்றைய தலைமுறையினர் அடைந்து கொண்டிருக்கும் பரிதாப நிலையை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆலயத்தில் நிகழும் ஆராதனைக்கு விரல்விட்டு எண்ணும் ஒரு சில முதியோர்களைத் தவிர இளைஞர்கள், வாலிபர்கள் யாரும் வருவதில்லை. பெரிய பெரிய ஆலயங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டு பெருமையோடு நிமிர்ந்து நிற்கும் ஆலயங்கள் இன்று பராமரிக்கக்கூட இயலாத நிலையில் பிறருக்கு விற்கப்படும் பரிதாப நிலையை எட்டி இருக்கின்றன. சில ஆலயங்கள் தனியாருக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. சில ஆலயங்களை இஸ்லாமியர்கள் வாங்கி அதை அவர்களின் தொழுகை இடமாக மாற்றியிருக்கிறார்கள். சில ஸ்கேட்டிங், பாக்ஸ்ஸிங் போன்ற பயிற்சி இடமாகவும், சர்க்கஸ் இடமாகவும், புத்தக நிலையமாகவும், இரவு விடுதிகளாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இது போன்றதொரு ஆலயம் மதுபானக் கடையாகவும் மாறியிருக்கிற பரிதாபத்தை எண்ணிப் பாருங்கள். எவ்வளவு பரிதாபம்!

சில குறிப்பிட்ட ஆலயங்களின் நிலையை படத்தோடு அளித்திருக்கிறோம். **(31ம் பக்கத்தில் படங்களைக் காணவும்) இங்கிலாந்து**

**தேசத்தில் செயின்ட் நிக்கொலஸ் சர்ச்** மிகப்பிரமாண்டமானதொரு ஆலயம். ஆலயத்திற்கு யாரும் வராத காரணத்தால் அதை நிர்வகித்தவர்கள் பராமரிக்க முடியாத சூழ்நிலையில் அதை தனியாருக்கு விற்றுவிட்டனர். வாங்கியவர் அதை வீடாக மாற்றியமைத்திருக்கிறார். **நெதர்லாந்து** தேசத்தில் பிரமாண்டமான ஆலயம் விற்கப்பட்டு, வாங்கியவர் அதை புத்தக விற்பனை நிலையமாக மாற்றியமைத்திருக்கிறார். **பென்சில்வேனியாவில் செயின்ட் ஜான்ஸ் பாப்டிஸ்ட் சர்ச்** என்ற பிரமாண்டமான ஆலயம் விற்கப்பட்டு வாங்கியவர் அதை மதுபானக் கடையாக மாற்றியிருக்கிறார்.

1960-ம் ஆண்டு முதல் இங்கிலாந்து தேசத்திலே மாத்திரம் 10,000 திருச்சபைகள் மூடப்பட்டிருக்கின்றன. 2020-ம் ஆண்டுக்குள்ளாக இன்னும் 4,000 திருச்சபைகள் மூடப்படும் நிலையில் உள்ளனவாம். மூடப்பட்ட தேவாலயங்களுடைய இடங்களிலே புதிதாக 2,000 மசூதிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதிகமாய் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்திலே தேவாலயமாய் இருந்த ஆலயங்களை, இஸ்லாமியர்கள் பணம் கொடுத்து வாங்கி, மேலேயிருந்த சிலுவையை எடுத்து தங்களுடைய பிறைநிலா அடையாளங்களைப் போட்டு மசூதிகளாக மாற்றியுள்ளார்கள். இது ஆச்சரியப்படுகிற ஒரு காரியமாய் நமக்கு தெரிந்தாலும் ஒரு **மிகப்பெரிய விசுவாச துரோகம் (2 தெச.2:3) நடைபெறும் என்று வேதம் முன்னுரைத்துள்ளது.** ஒரு காலத்தில் உலகமெங்கும் சுவிசேஷம் அறிவித்த இங்கிலாந்து தேசம், இன்றைக்கு முஸ்லீம் நாடாக மாறி விடுமோ என்று எண்ணும் அளவுக்கு மாறிக்கொண்டிருக்கிறது. விசுவாசத்தை விட்டு மக்கள் விலகி, தாங்கள் அறிந்த தேவனை மறுதலிக்கிற காலத்திற்குள் வந்திருக்கிறோம். **"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்"** என்று கடைசி நாட்களில் நடப்பவைக் குறித்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார் (மத்.24:12) அப்போஸ் தலனாகிய பவுல் கடைசிநாட்களில் நடக்கும் கொடிய காரியங்களை 2 தீமோ.3:1-5 வசனங்களில் பட்டியலிட்டுக் காட்டியிருக்கும் 19 காரியங்களைப் பாருங்கள். ஓசியா தீர்க்கதரிசி மூலமாக ஆண்டவர், **"நீ உன் தேவனுடைய வார்த்தையை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்"** (ஓசி.4:6) என்ற கடுமையான ஒரு எச்சரிப்பைக் கொடுத்திருப்பதைக் காண்கிறோம். பெற்றோர்கள் தேவனுடைய வார்த்தையை விட்டு வழிவிலகி தூரமாகப் போய்விட்டனர். அவர்கள் சந்ததியினரை தேவன் அவர் சொன்னபடியே மறந்தார், கைவிட்டுவிட்டார். இவைகளெல்லாம் அதன் விளைவுகளே. தேவனுடைய வார்த்தை

ஒருநாளும் பொய்ப்பதில்லை. அது நிறைவேறும் கடைசி நாட்களுக்குள் வந்திருக்கிறோம். நம்முடைய சந்ததியினரைக் குறித்து விழித்தெழுவோம். குடும்பங்களை உருவாக்கிய திருநோக்கத்தை ஆண்டவர் மல்கியா தீர்க்கதரிசி மூலம் **"தேவபக்தியுள்ள சந்ததியை பெறும்படி தானே"** என்று (மல்.2:15)ல் சொல்லியுள்ளார். **நம்முடைய குடும்பத்தில் தேவபக்தியுள்ள சந்ததியை உருவாக்கியிருக்கிறோமா?** இல்லாவிட்டால் நம்முடைய ஆலயங்கள் மறைந்து போகும், நாமே ஆலயமாக மாறாவிட்டால் (1 கொரி.3:16,17) நாமும் அழிந்துபோவோம். **"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை"** என்று (ஏசா.45:22)ல் ஆண்டவர் தம்மை நோக்கிப் பார்க்கும்படி ஓர் அழைப்பைக் கொடுக்கிறார். அழைப்புக்குச் செவிகொடுத்து அவரை நோக்கிப் பார்ப்போம். அவர் கண்களிலிருந்து நமக்குக் கிருபை கிடைக்கட்டும். நம்மை சீர்ப்படுத்திக் கொள்வோம். ●

## நாம் எதற்காக இயேசுவைப் பின்பற்றுகிறோம்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் ஊழியஞ் செய்த காலத்தில் ● சிலர் "அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்" (யோவா.6:2). ● சிலர் அவர் உபதேசித்த கூடுகைகளில் கலந்து கொண்டு அப்பம் புசித்து, திருப்தியானதினாலே அவரைத் தேடினார்கள் (யோவா.6:26). ● சிலர் அவர் வேதபாரகரைப் போல் போதியாமல் அதிகாரமுடையவராய் போதித்தபடியால் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியமடைந்து அவரைப் பின் தொடர்ந்தார்கள் (மத்.7:28,29). ● சிலர் அவரை அரசியல் தலைவராக அதாவது இராஜாவாக வரவேண்டுமென்று விரும்பி அவரைப் பின்பற்றினார்கள் (லூக்.19:37,38). **●சிலர் அவரே நித்திய வாழ்வைத் தருபவர்** (யோவா.6:47,48) என்று அறிந்து உறுதிபடுத்தி அவரைப் பின்பற்றினார்கள். ● சிலர் அவருடைய உபதேசம் ஏற்றுக்கொள்ளக் கடினமாயிருந்தபடியால் அவரை விட்டுப் பின் வாங்கி பின்பற்றாது போனார்கள் (யோவா.6:66). ● சிலர் அவரை தச்சனுடைய மகன் என்று அற்பமாக எண்ணி பின்பற்றாமற் போனார்கள் (மத்.13;55-57). நம்முடைய நிலை என்ன? இது உங்கள் சுய ஆய்வுக்கு.

**நன்றி: நமது அனுதின மன்னா 2021**

# மேவிபோசேத்தும் நாமும்

தேவனுடைய கட்டளையை மீறி பாவத்தில் வீழ்ந்து, தேவனுடைய சமுகத்தையும், ஐக்கியத்தையும் மனுக்குல படைப்பின் தொடக்கத் திலேயே இழந்தது. ஆனாலும் இவற்றையெல்லாம் முன்னறிந்த ஆண்டவர் மனுக்குலத்தின் மீது வைத்திருந்த அன்பின் காரணமாக அதை மீட்கும் திட்டத்தை முன்பே திட்டமிட்டிருந்தார் என்பதை நாம் வேதத்திலிருந்து விளங்கிக் கொள்ளு கிறோம் (ஆதி.3:15). சாத்தானின் வலையில் விழுந்த மனுக்குலத்தை மீட்டெடுத்து, சாத்தானின் தலையை நசுக்கி ஜெயமெடுக்க, தேவன் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். இயேசு கல்வாரியில் தம் ஜீவனை தியாக பலியாக ஒப்புக்கொடுத்தார். அதன் மூலமாய் பரம எருசலேமாகிய நித்திய ராஜ்ஜியத்தில், நாம் அவருடன் நித்திய, நித்திய காலமாக வாழும் சிலாக்கியத்தை நமக்கு அளித்திருக் கிறார்.

இந்த அன்பு மேலீட்டின் செயலுக்கு, ஓர் நிழலாட்டமாக தேவன் வெறுத்து ஒதுக்கிய சவுலின் மகனான யோனத் தானுக்கும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அரசனான தாவீ திற்கும் இடையே காணப்பட்ட நேச அனலின் விளைவாக நிகழ்ந்த ஓர் நிகழ்வை 2 சாமு.9:1-13ல் வாசிக் கிறோம்.

சவுல், தாவீதைக் கொல்ல பல முறை முயற்சித்தான். ஆனால், யோனத்தான் தாவீதை அதிகமாய் நேசித்தான். மேலும், தாவீதுதான், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அரசன் என்பதை யோனத்தான் நிச்சயமாக அறிந்திருந்தான். எனவே, தாவீது சவுலின் சந்ததிக்குத் தயவு காட்ட வேண்டும் என்று கூறி, இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர் (1 சாமு.20:15,16).

## மேவிபோசேத்தைக் கண்டு பிடித்தல்

சவுலும், யோனத்தானும், பெலிஸ் தருக்கு எதிராக நடைபெற்ற போரில் மடிந்து போனார்கள். (1 சாமு.31:6; 2சாமு.1:12) சவுல் மரித்தபின், சவுல் கிபியோனியருக்குச் செய்த தீமை யினிமித்தம், சவுலின் குமாரர் அனைவரையும், கிபியோனியர் கொன்று போட்டார்கள். மேவிபோ சேத் யோனத்தானின் மகன். அவன் ஒரு தாதியின் பராமரிப்பிலிருந்தான். சவுல், யோனத்தான் இவர்களின் மரணத்தைக் கேள்விப்பட்ட மேவி போசேத்தின் தாதி, எதிராளிகள் மேவிபோசேத்தை கொன்று போடக் கூடாது என அவனை எடுத்துக் கொண்டு ஓடிப்போனாள். அவள் ஓடிப்போகிற அவசரத்தில் மேவிபோ சேத் விழுந்து முடவனானான். ஐந்து வயதான அவன் உயிர் தப்பிப் பிழைத்தான் (2 சாமு.4:4).

தாவீது அரசனானபின், யோனத் தானுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, யோனத்தானின்

சந்ததியில், தான் தயவு பாராட்ட வேண்டியவர் யாரேனும் மீந்திருக் கிறார்களா என்று விசாரித்தான் (2 சாமு.9:1). அப்பொழுது சவுலின் வேலைக்காரனாகிய சீபா, யோனத் தானுக்கு இரண்டு கால்களும் முடமான மேவிபோசேத் என்னும் குமாரன், லோதேபாரில் உள்ள மாகீரின் வீட்டில் இருப்பதாக தாவீதுக்கு அறிவித்தான்.

இதைப்போன்றுதான் நாமும், நம் சுய இச்சைகளினால் இழுக்கப்பட்டு, பாவம் நம்மை முடமாக்கி, தேவ னுடைய வழியில், ஆவிக்கு ஏற்ற பிரகாரமாய் நடக்க இயலாதவர் களாய் முடமாகி, பாவத்திற்கு அடிமை களாக வாழ்ந்து வந்தோம். (ரோம.6:16).

**மேவிபோசேத்திற்கு அழைப்பு**

மேவிபோசேத் இருந்த இடத்தை அறிந்த தாவீது உடனே அவனை எருசலேமுக்கு வரவழைத்தான். ஆனால், தன்னைக் கொல்வதற்குத் தான் தாவீது அழைத்திருக்கிறான் என்ற ஓர் பயம் மேவிபோசேத்தை ஆட்கொண்டது. ஆனால் தாவீதோ, அவனைப் பட்சமாய் நடத்தினான். மேவிபோசேத், “செத்த நாயைப் போலிருக்கிற என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு நான் எம்மாத்திரம்” என்று தன்னைத் தாழ்த்தினான். ஒருவேளை தாவீது. யோனத்தானின் சாயலை அவனில் கண்டிருக்கக் கூடும்.

இதேபோன்றுதான், தேவ னுடைய வழியைவிட்டு எங்கோ அலைந்து திரிந்த நம்மை பரிவுகாட்டி அழைத்து, தேவன் நம்மைத் தேடிக் கண்டுபிடித்தார் (ஏசா.62:12). உலகத்துடன் இரண்டறக் கலந்து, அதாவது வேறு பிரிக்கப்பட்ட ஜீவியம் இல்லாது, தாயினிடமிருந்து (உலகத் தினின்று) தொப்புள்கொடி அறுக்கப் படாமல், அசுத்தத்தில் கிடந்த நம்மை (எசே.16:4) தேடிக் கண்டுபிடித்தார்.

**மேவிபோசேத், தாவீதினால் இராஜகுமாரனாக்கப்பட்டு உயர்த்தப்படல்**

தாவீது, மேவிபோசேத்தை ஓர் இராஜகுமாரனுக்கு சமமாக்கி, அவனைத் தன் மகனாக சுவீகரித்து, சவுலின் ஆஸ்திகள் அனைத்தையும் மீட்டுக்கொடுத்து, மிகுந்த ஐசுவரிய வனாக்கி, அவனை ஏமாற்றி வந்த சீபாவையும், அவன் 15 குமாரர் களையும், 20 வேலைக்காரர் களையும் அவனுக்குக் கீழ்ப்படுத்தி, அவனை சேவிக்கவும், நிலபுலன் களைப் பராமரித்து, அவன் குடும்பத் திற்கான தேவைகளை சந்திக்கவும் கட்டளையிட்டான். மேவிபோ சேத்திற்கு மீகா என்னும் குமாரன் இருந்தான். **மேவிபோசேத்தும் ஒரு இராஜகுமாரனைப் போல், தாவீது ராஜாவின் பந்தியில் நித்தமும் உணவு உண்டான் என்றால் அது எவ்வளவு பெரிய சிலாக்கியம்.** முடமான ஒருவனைப் பராமரித்து, ஆதரிப்பது கடினமான ஒரு காரிய மாகக் காணப்பட்டாலும், மனமு வந்து, தன் ஆத்ம நண்பன் யோனத் 2

தானின் சாயல், மேவிபோசேத்தில் காணப்பட்டதால், தன் நண்பனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையைக் காத்து, அவனை யூதாவின் தலை நகராகிய எருசலேமில் ஒரு இராஜ குமாரனைப்போல, அவன் ஆயுள் உள்ளவரை வாழவைத்தான்.

இவ்வாறு அசுத்தத்தில், அருவருக் கத்தக்க நிலையில், உலகத்திற்குள் மூழ்கிக் கிடந்த நம்மை தேடிக் கண்டு பிடித்ததுமன்றி, பாவ மற தமது இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து, பரிசுத்த ஆவியினால் ஸ்நானம் பண்ணுவித்து, எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவித்து, அழியாத அலங்கரிப்பாகிய சாந்தமும், அமைத லுமுள்ள குணங்களால் அலங் கரித்து ( 1 பேது.3:4) இரட்சிப்பின் வஸ்திரங்களை நமக்கு உடுத்தி, நீதியின் சால்வையை நமக்குத் தரிக்கிறார் (ஏசா.61:10). இவ்வாறு அண்டசராசரங்களையும் படைத்த தாவீதின் வேரும், தாவீதின் குமாரனு மான தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் நாம் உடன் சுதந்தர ராகி, ‘‘அப்பா, பிதாவே’’ என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவி காரத்தின் ஆவியைப் பெற்றிருக் கிறோம்.

மேவிபோசேத் தன் ஜீவனுள்ள மட்டும் தான் எருசலேமில், தாவீது அரசனுடன் வாழ்ந்தான்.அவனுடைய வாழ்வு அத்துடன் முடிந்தது. ஆனால், மேவிபோசேத்துக்கு இல்லாத ஒரு மாபெரும் பொறுப்பு நமக்கு உண்டு. **கிறிஸ்துவுக்குள் நம்மை ராஜாக் களும், ஆசாரியருமாக்கின அவ ருடைய புண்ணியங்களை அறி விக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாகவும், அவருக்குச் சொந்த மான ஜனமாகவும் மாற்றினது மன்றி, பரம எருசலேமில் நித்திய நித்திய காலமாய் வாழும் பெரும் பாக்கியத்தையும் நமக்குத் தந்துள்ளார்** (1 பேது.2:9).

எனவே, ‘‘தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்’’ என்ற (யோவா.3:16)ஜ இரட்சிப்பின் சுவிசேஷமாக அறிவிப் போம். ஆத்தும அறுவடை செய்து, அழிந்து போகும் ஆத்துமாக்களை அவரண்டை சேர்ப்போம். அதற்கான பிரதிபலனை நித்தியத்தில் பெற்று அவரோடு நித்திய நித்தியகாலமாய் வாழ்ந்து சுகித்திருப்போம். அல்லேலூயா! ●

- சகோதரி ஜெயா சுசீலன்.

---

**‘‘சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்’’ [சங்.41:1]**

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

- பாகம் 15

**நாத்திகனைச் சந்தித்தல்**

**கிறிஸ்தியானும் தன்நம்பிக்கையும்**, ஒளியின் தூதனைப்போல் வேடமணிந்து வந்தவனின் வஞ்சக வலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு பயணத்தைத் தொடர்ந்தார்கள். தங்களது சரியான பாதையை விட்டு வழிவிலகிச் சென்றதற்கான சிட்சையை அடைந்து கொண்டோம் என்று உணர்ந்தனர். மோட்சப் பட்டணத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். எதிரில் ஒருவர் வருவதைக் கண்டனர். மோட்சப் பட்டண வழியை விட்டு விலகி மாறான வழியில் திரும்பிச் செல்லும் அந்த மனிதரைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அந்த மனிதர் **கிறிஸ்தியானையும் தன் நம்பிக்கையையும்** கண்டு "நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். "நாங்கள் சீயோன் மலைக்குச் செல்லுகிறோம்" என்ற அவர்களுடைய பதிலைக் கேட்டு **வீண்புகழ்ச்சி** பெரிய ஏளனச் சிரிப்பாகச் சிரித்தான். அவன் தன்னை "நாத்திகன்" என்று (Atheist) சொல்லிக்கொண்டான். "நீ எங்களைப் பார்த்து சிரித்ததற்கு என்ன காரணம்" என்று கேட்டதற்கு "உங்களது அறியாமையை நினைத்து சிரித்தேன். ஏனெனில் சீயோன் என்று ஒரு இடமே இல்லையே" என்றான்.

கிறிஸ்தியானும், தன்நம்பிக்கையும் "சீயோனைக் குறித்து எங்களுக்கு நிச்சயமிருக்கிறது. ஆனால் நீ எப்படி இல்லை என்று சொல்லுகிறாய்" என்று கேட்டனர். அதற்கு **நாத்திகன்** இருபது வருடங்களுக்கு முன்பாக நான் மோட்சப் பட்டணத்திற்கு பயணத்தை மேற்கொண்டேன். நான் அலைந்து திரிந்ததுதான் மிச்சம்: முடிவாக அப்படி ஒரு பட்டணம் இல்லை என்பதை நான் இப்பொழுது தெரிந்துகொண்டபடியால் நான் என் பயணத்தைத் தொடரவில்லை. இருபது ஆண்டுகள் கடந்தும் மோட்சப்பட்டணம் இருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஆகவே மோட்சப்பட்டணம் என்பது இல்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். ஆனால் மோட்சப் பட்டணம் முன்பு இருந்திருக்கிறது என்று நம்புகிறேன். ஆனால் நான் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே அது இப்போது இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். ஆகவே தேடுவதை நிறுத்திவிட்டு திரும்பிச் செல்லுகிறேன். என் சொந்த பட்டணத்திற்குச் சென்று, நான் முன்பு விட்டுவிட்ட எல்லா இன்பங்களையும் தொடர்ந்து அனுபவிக்கப் போகிறேன் என்று சொன்னான்.

அவன் கடந்து சென்றபின் **கிறிஸ்தியான் தன்நம்பிக்கையைப்** பார்த்து இந்த மனிதன் சொல்வது உண்மைதானா? என்று கேட்டான். **கிறிஸ்தியானின்** கேள்வியைக் கேட்டு **தன் நம்பிக்கை** அதிர்ச்சியடைந்தான்.

அவன் சொல்வது முற்றிலும் தவ றானது. அவனும் **வீண்புகழ்ச்சிக் காரனில்** ஒருவன்தான் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் தேவன் மீது விசுவாசமில்லாத ஒரு வன் சொல்லும் காரியங்களுக்கு செவிசாய்க்கக் கூடாது என்பதற்கான காரணங்களை பட்டியலிட்டுச் சொன்னான்.

முதலாவது நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும் (2 கொரி.5:6).

இரண்டாவது நாம் விசுவாசத்தை விட்டு விலகுவதற்கு காரணமா யிருக்கக் கூடிய எந்த வார்த்தை களுக்கும் நாம் செவிகொடுக்கக் கூடாது. (''என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே'' (நீதி.19:27).

மூன்றாவது நம்முடைய ஆத்தும இரட்சிப்பைக் காத்துக் கொள்வதில் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும் (''நாமோ கெட்டுப்போகப் பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர் களாயிருக்கிறோம்'' (எபி.10:39).

**தன்நம்பிக்கையின்** பதிலைக் கேட்டு **கிறிஸ்தியான்** மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். ''நான் சந்தே கப்படுவது போன்ற கேள்வியை எழுப் பியது நம்முடைய பயணத்தின் பாதையைக் குறித்து நீ எவ்வளவு உறுதியாக இருக்கிறாய் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான். ஆண்டவரின் மாறாத வார்த்தையில் நம்மை வலுவாக ஊன்றிக் கொண்டு முன்னேறிச் செல்லுவோம். ஏனெனில் அவருடைய சத்திய வார்த்தையில் சற்றேனும் பொய்மை இல்லை'' (''சத்தியத்தை நீங்கள் அறியாததினா லல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக் கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'') ( 1 யோவா.2:21).

## நாம் கற்றுக்கொள்வது

அன்பார்ந்த நண்பர்களே, நாம் இதுவரை சந்தித்திராத மிக முக்கிய மான கேள்வியை இன்று சந்தித்து வருகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் தங்களது நித்திய வாழ்வின் நம்பிக்கையைத் குறித்து தொடர்ந்து சிலகேள்விகளால் தாக்கப்படுகிறார்கள், பரியாசத்திற் குள்ளாகிறார்கள். ஆகவே அப்படிப் பட்டக் கேள்விகளை நாம் சந்திக்கும் போது நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டி யது அவசியம். எனவே இது மிகவும் முக்கியமானது.

நாம் இப்பொழுது கண்ட **நாத்தி கனைப்** போலவே உலகில் நம்மைச் சுற்றியுள்ள பலர் தேவனுடைய இராஜ் ஜியத்தைக் குறித்து அசைக்க முடியாத நிரூபணத்தைக் கேட்கிறார்கள். சிலர், ''இயேசு கிறிஸ்துவைப் போல தண் ணீரின் மேல் நடந்து காட்டுங்கள். அப்பொழுது நாங்கள் நம்புவோம்'' என்று சொல்லுகிறார்கள். ''நீங்கள் இயேசுவைக் கண்டீர்களா அல்லது

பரலோகத்தைப் பார்த்திருக்கிறீர்களா பின்னர் ஏன் நீங்கள் காணாத ஒரு இடத்திற்குப் போவேன் என்று பேசுகிறீர்கள்?'' என்று நம்மைப் பரியாசம் செய்கிறார்கள்.

இந்த கேள்விகளுக்கெல்லாம் எளிதாக நாம் அளிக்கும் பதில் **தன் நம்பிக்கை** சொன்னதுபோல ''நாங்கள் தரிசித்து நடவாமல் விசு வாசித்து நடக்கிறோம்'' என்பதுதான் நம்முடைய பதில்,

விசுவாசம் என்பது இருதயத்தின் ஆழத்தில் உள்ளதாகும். அதை ஒரு அளவு கோலைக் கொண்டோ, தராசைக் கொண்டோ அளவிட முடி யாது. இயேசு நம்முடைய இரு தயங்களில் வந்து நம்மைத் தொடும் போது அதை நம்முடைய இருதயம் அறிந்துகொள்ளுகிறது. சில வேளை களில் நாம் நம்முடைய வாழ்வின் பள்ளத்தாக்குகள் வழியாகச் செல்லும் போது முன்பு இருந்தது போன்று ஆண்டவரோடு நமக்குள்ள நெருக்க மான ஐக்கியத்தை அனுபவிக்க முடிவதில்லை. ஆனாலும் நமக்கு அவர் உண்மையுள்ளவராயிருந் திருக்கிறார் என்பதை மறந்துவிடக் கூடாது. ''நாம் உண்மையில்லாத வர்களாயிருந்தாலும் அவர் உண் மையுள்ளவராயிருக்கிறார்''(2 தீமோ.2:13) (If (even when) we beleive not he abideth faithful- KJV). நம்முடைய இருதயத்திலுள்ள இந்த தனிப்பட்ட விசுவாசம்தான். சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையின் கோட்டைகளையும் நாம் ஊடுருவிச் செல்ல உதவுகிறது.

**தன்நம்பிக்கை** பட்டியலிட்ட இரண் டாவது பதிலைப் போல நம்முடைய விசுவாசம், விசுவாசத்தை விட்டு விலகக் காரணமாக இருக்கக்கூடிய எந்த வார்த்தைகளுக்கும் செவிகொடாத படி விலக்கி நம்மைக் காத்துக் கொள்ளும் (நீதி.19:27). தாவீதின் சங்கீதத்தின் முதல் வசனத்திலேயே துன்மார்க்கருடைய ஆலோசனையின் படி நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காரமலும் இருக்க எச்சரிக்கை கொடுக்கப்பட்டி ருக்கிறது. நடக்கவும் கூடாது, நிற்கவும் கூடாது, உட்காரவும் கூடாது என்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? யோசேப்பைப் போல விலகி ஓடிவிட வேண்டும் (ஆதி.39:9-12). அப்படி ஓடிவிடாமல் நான் அவர்களோடு ஐக்கியம் வைத்தாலும் அவர் களோடுள்ள உறவில் என்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று தைரியம் கொள்வோமென்றால் ஏதேனும் சந்தர்பத்தில் சந்தேகமோ, அவிசுவாசமோ நம்மில் துளிர்க்க ஏதுவாகும், தொடர்ந்து துணிகரம் கொள்வோமானால் அது நம்மில் வேர்கொண்டு நம்முடைய விசு வாசத்தை நெருக்க ஏதுவாகும். ''பிசாசுக்கு (காலூன்ற) இடங்கொ டாமலும் இருங்கள்'' என்று (எபே.4:27)இல் வேதம் எச்சரிக்கிறது ("Do not give the devil a foothold'' - NIV).

சில விசுவாசிகள் தேவனை அறியும் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் தேவனுக்கு விரோதமான அறிவைப் புகுத்தும் புத்தகங்களைப் படிக்க ஆரம்பிக்கிறார்கள். மேலான அறிவை அறிய வேண்டுமென ஆராய்ச்சியில் இறங்குகிறார்கள். அதன் விளைவுகளால் சிலர் விசுவாசத்தை விட்டு வழுவிச் சென்றுள்ளனர். நான் என்னுடைய Ph.D படிப்பிற்காக கடவுள் இல்லை என்று போதிக்கிற புத்தகங்களையும், கிறிஸ்தவ விசுவாசத்திற்கு விரோதமான புத்தகங்களையும் படிக்கும் சூழல் ஏற்பட்டது. அப்போதெல்லாம் என்னுடைய இருதயத்தையும் விசுவாசத்தையும் பரிசுத்த ஆவியானவர் என்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று எப்பொழுதும் ஜெபித்துக் கொள்வேன். இதுபோன்ற மேற்படிப்பின் காரணமாகச் சிலர் விசுவாசத்தை விட்டு வழுவிச் சென்றோரை நான் கண்டிருக்கிறேன். தேவனுடைய சத்திய வார்த்தையைக் கொண்டு நம்முடைய இருதயத்தையும், சிந்தையையும் காத்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக நம்முடைய ஆத்தும இரட்சிப்பை எப்போதும் உறுதி செய்து கொள்ள வேண்டும். ஆத்தும இரட்சிப்பு என்பது பரிசுத்த ஆவியானவர் நம்மில் செய்யும் வேலையாகும். அதுதான் நம்முடைய நித்தியத்தை உறுதிப்படுத்தும். நம்முடைய மனதில் என்ன சந்தேகம் எழுந்தாலும் நம்முடைய ஆத்தும இரட்சிப்பைத் சிலர் குறித்த சந்தேகம் நம்முடைய மனதில் வராமல் விழிப்புடனிருக்க வேண்டும். அதுதான் நம்மை நித்தியத்திற்கு நேராக வழி நடத்தும்.

இறுதியாக சத்திய தேவனில் பொய்மை சற்றேனுமில்லை என்று ஒவ்வொரு கிறிஸ்தவரும் பிரகடனப் படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் செய்து முடித்த ஆத்தும இரட்சிப்பை அஸ்திவாரமாகக் கொண்டு நம்முடைய கிறிஸ்தவ வாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டும். ஆண்டவருடைய சத்திய வார்த்தை ஜீவனும் வல்லமையுமுள்ளது. அவற்றில் அசைவில்லா நம்பிக்கை வைத்து நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.

நாத்திகம் மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தைக் குறித்தும், நம்முடைய நித்திய நம்பிக்கையைக் குறித்தும் அநேக சவால்கள் எழும்புகிறதைக் காண்கிறோம். ஆகவே நம் நம்பிக்கையையும், விசுவாசத்தையும், ஆத்தும இரட்சிப்பையும் காத்து, தேவனுடைய சத்திய வார்த்தையிலும் உறுதியாக இருப்போம். தேவன் தாமே கட்டி எழுப்பிய அந்த நகரத்தின் மீது நம்முடைய கண்கள் நோக்கமாக இருக்கட்டும். நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை பொறுமையோடு ஓடக்கடவோம். - தொடரும் ●

**– சகோதரி. லாரா டிலனோ,**

**email Id: lauradelano@yahoo.com**

# நீதிமானுடைய சந்ததி செழிக்கும்

மோசே, கர்த்தருடைய மகிமையைக் காணவேண்டும் என்று விரும்பி அவரைக் கேட்டான். கர்த்தர் அவனை சீனாய் மலையின் உச்சிக்கு வரும்படி அவனை அழைத்தார். அவன் அப்படியே சென்றான். கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி அவன் அருகே வந்து நின்றார். கர்த்தர், அவருடைய தெய்வீக சுபாவத்தை மோசேக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். "கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிற போது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார்" (யாத்.34:6,7). அதை அறிந்த மாத்திரத்தில் மோசே தரை மட்டும் குனிந்து அவரைப் பணிந்து கொண்டான்.

அவருடைய சுபாவத்திற்கு நிரூபணமாக ஒரு நீதிமானின் சந்ததியை கர்த்தர் எவ்வளவு நிறைவாய் ஆசீர்வதிக்கிறார் என்பதையும் தேவன் இல்லை என்று சொல்லுகிற ஒரு நாத்திகனின் சந்ததி எவ்வாறு சபிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஒரு நீண்ட ஆய்வுக்குப் பின் அமெரிக்காவிலுள்ள ஒரு குழுவினர் வெளியிட்ட அறிக்கையிலிருந்து நாம் உறுதியாக விளங்கிக் கொள்ள முடிகிறது.

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த அமெரிக்காவைச் சேர்ந்த **ஜோனத்தான் எட்வர்ட்** (1703-1758) என்பவர் தேவபக்தியுள்ள தேவமனிதர். அவருடைய முழுக்குடும்பமும் தேவபக்தியுள்ள குடும்பம். வேத அறிஞர், அவருடைய வழிதோன்றல்கள் அல்லது சந்ததியினர் 1394 பேர். அவர்களுள் 295 பேர் பட்டாதாரிகள். 13 பேர் கல்லூரி முதல்வர்கள். 65 பேர் கல்லூரி பேராசிரியர்கள் 30 பேர் நீதிபதிகள். 75 பேர் இராணுவ அதிகாரிகள். ஒருவர் பல்கலைக்கழக முதல்வர். 80 பேர் அரசு பொதுத்துறை அதிகாரிகள். 100 பேர் புகழ்பெற்ற மிஷனெரிகள். 100 பேர் வழக்கறிஞர்கள். 3 பேர் அமெரிக்க நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள். 3 பேர் மாகாண ஆளுர்கள் (Governors). 3 பேர் பெரு நகர மேயர்கள். ஒருவர் அமெரிக்க அரசு கணக்குத் தணிக்கை அதிகாரி (Auditor General) . ஒருவர் ஐக்கிய அமெரிக்க குடியரசு துணைத்தலைவர். இவர்கள் அனைவரும் அமெரிக்க அரசின் செயல்பாட்டில் உறுதுணையாக இருந்திருக்கிறார்களே அல்லாமல் எந்த வகையிலும் அரசுக்குத் தொல்லை கொடுத்தவர்களாக இல்லை.

அதே சமயத்தில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த **மாக்கீஸ் கிக்ஸ் என்ற துன்மார்க்கமான ஒரு நாத்தி கனின்** வழித்தோன்றல்கள் அல்லது சந்ததியினர் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதைக் குறித்து நடத்திய ஆய்வின் முடிவையும் வெளியிட்டுள்ளனர். மாக்கீஸ் கிக்ஸின் மனைவி ஆண்டவரை அறியாதப் பெண்மணி. அது ஒரு சபிக்கப்பட்டக் குடும்பமாகவே இருந்தது. அவருடைய சந்ததியினர் 560 பேர். அதில் 300 பேர் தரித்திராகவே மரித்தார்கள். 150 பேர் குற்றவாளிகள். 100 பேர் குடிக்காரர்கள். 7 பேர் கொலைக்காரார்கள் அவருடைய சந்ததியில் அநேக பெண்கள் விபசாரிகள். அவர்களில் அநேகர் வங்கிகள் மூலமாக பெற்றக் கடனைத் திரும்பச் செலுத்தாமல் அரசுக்கு 1.25 மில்லியன் டாலர் இழப்பை உண்டாக்கியவர்கள்.

தேவனை சார்ந்து கொண்ட மக்களின் சந்ததியினருக்கும் நிறைவான ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளும் அவருடைய அன்பின் கரிசனையை எண்ணிப்பாருங்கள். ‘‘ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்’’ என்றும், ‘‘கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திட நம்பிக்கையுண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்’’ என்றும் வேதம் சொல்லுகிறதல்லவா (நீதி.14:26) . அதே சமயத்தில் ‘‘குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல் பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்’’ என்றும் காண்கிறோம். ‘‘மெய்யாகவே தேவன்....தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்’’ என்று வேதம் சொல்லுகிறதே(சங். 68:21). எச்சரிக்கையடைவோம். ‘‘ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்’’ என்றும் (ஏசா. 66:2) ‘‘கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது’’ என்றும் வேதம் கூறுகிறது (சங்.103:17). கர்த்தருடைய வசனத்திற்கு நடுங்கி, அவருக்குப் பயப்படும் பயத்தை வளர்த்துக் கொண்டு அவருடைய கிருபையில் சார்ந்து கொள்வோமானால் அந்தக் கிருபை நம்மையும் சூழ்ந்து கொள்ளும், நம்முடைய சந்ததியையும் சூழ்ந்து கொள்ளும்.

(நீதிமானாகிய தேவ மனிதனுடைய சந்ததியினருக்கு வரும் ஆசீர்வாதத்தையும், தேவனைப் புறக்கணித்த அக்கிரமக்காரனுடைய சந்ததியினருக்கும் வரும் சாபங்களைக் குறித்த ஆய்வறிக்கைத் தகவலை மதிப்பிற்குரிய பாஸ்டர். அலெக்ஸ் அவர்கள். புத்தாண்டு (2021) நிகழ்ச்சி ஒன்றில் பகிர்ந்து கொண்ட தேவ செய்தியிலிருந்து கிடைத்த தகவலில் அடிப்படையில் தொகுப்பாசிரியர் கேட்டு ஆக்கிய செய்தியாகும்). ●

# நீங்கள் மற்றவர்களை கிறிஸ்துவண்டை இழுக்கும் காந்தமாக இருக்கிறீர்களா?

ஒருமுறை மடகாஸ்கர் தீவிலே அநேக மக்கள், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் எடுக்க முன் வந்தார்கள். அப்பொழுது அவர்களிடத்திலே எது உங்களை இயேசு கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தியது என்ற கேள்வி கேட்கப் பட்டது. ஒரு மனிதன், ஒரு நபரைக் காண்பித்து இவர் என்னுடைய உறவினர். இயேசுவை ஏற்றுக் கொண்டவுடன் தன் குடிப்பழக் கத்தை விட்டுவிட்டு ஒழுக்கமான வாழ்க்கை வாழ்கிறார். இந்த மாற்றம் என்னை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தது என்றான்.

இன்னொரு மனிதன், ஒரு நபரைச் சுட்டிக்காட்டி, இவர் கொலைக்குற்றம் செய்தவர். திருட னாக இருந்தவர், ஆனால் இயேசு இவருக்குள் வந்ததால் நேர்மை யான வாழ்க்கை வாழ்கிறார் என் றான். ''மற்றுமொருவர்'' இவர் தன் குடும்பத்தை விட்டு விட்டு பொறுப் பில்லாமல் சுற்றிக் கொண்டி ருந்தார். ஆனால் இயேசு இவரை மாற்றினார். இப்போது பொறுப்புள்ள வராக தன் குடும்பத்தோடு சந்தோஷ மாக வாழ்கிறார். இவரைப் பார்த்த நான் இயேசுவினிடத்தில் வந்தேன். இப்படிப்பட்டவர்களுடைய வாழ்க் கையில் ஏற்பட்ட மாற்றங்களைப் பார்த்து, அன்று அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆம், பிரியமானவர்களே! கிறிஸ் தவ வாழ்க்கை என்பது மாற்றம் பெற்ற உயரிய வாழ்க்கை! நேர்மையான, இயேசுவை தம் வாழ்வில் பிரதி பலிக்கும் வாழ்க்கை! நம் வாழ்க் கையின் மூலமாக எத்தனைபேர் இயேசுவின் வல்லமையை உணர்ந் திருக்கிறார்கள்? **“ஒரு சாட்சியான வாழ்க்கை 100 பிரசங்கங்களுக்குச் சமம்”** என்று ஒரு தேவமனிதர் கூறி னார். நம் வாழ்வின் தரத்தை ஆராய்ந்து பார்ப்போம். அநேகரை கிறிஸ்துவண்டை இழுக்கும் ஒரு காந்த மாக வாழ ஆண்டவர் நம்மை பெலப்படுத்துவாராக! ●

**நன்றி:** வாழ்வில் வார்த்தை

## பாவம் என்பது எது?

எது உங்கள் நம்பிக்கையைப் பலவீனப்படுத்துகிறதோ, உங்கள் மனச் சாட்சியின் மென்மையைச் சேதப்படுத்துகிறதோ, கர்த்தரை நோக்கிய உங்கள் பார்வையை மறைக்கிறதோ, ஆவிக்குரிய காரியங்கள் மேலுள்ள உங்கள் பசிதாகத்தைக் கொள்ளையிடுகிறதோ, உங்கள் மாம்சத்தின் வல்லமையை அதிகரிக்கச் செய்து உங்கள் ஆவியின் வல்லமையை இழக்கச் செய்கிறதோ, அது அனைத்தும் பாவமாகும். இந்த சுயபரிசோதனைகள் மூலமாக பாதிப்பே யில்லாதது போலத் தோன்றுகிற தீமையை கூட நீங்கள் கண்டுகொள்ளலாம்.

**- சூசன்னா வெஸ்லி**

# ஊழியம் ஒரு போராட்டம்

**"முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்கு சொல்லும்படி நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்" (1 தெச.2:1,2).**

உலகப்பிரகாரமான ஊழியத்திற்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கும் ஊழியத்திற்கும் மிகுந்த வேறுபாடுகளுண்டு. இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் ஊழியம் ஆவிக்குரிய ஊழியமாகும். அதை ஆவிக்குரிய ஒரு போராட்டம் என்றும் சொல்லலாம். ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுல் "மாம்சத்தோடும், இரத்தத்தோடு மல்ல...இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்று குறிப்பிடுகிறார். பரிசுத்த பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோர் தெசலோனிக்கேயர் மத்தியில் ஊழியஞ்செய்தனர். மிகுந்த பாடுகள், நிந்தைகள் மத்தியில் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட **கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தின் ஊழியத்தை உண்மையோடு செய்து நிறைவேற்றினார்கள்.** ஆகவே அவர்களது ஊழியம் பயனுள்ள ஊழியமாக, நல்ல கனிகளைக் கொடுத்தது. தெசலோனிக்கேயிலுள்ள மக்கள், மற்றவர்கள் வாசித்து அறியத்தக்க கிறிஸ்துவின் நிருபமாக மாறினார்கள்.

பரிசுத்த பவுலும் அவரது உடன் ஊழியர்களும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை உண்மையோடு செய்தது மாத்திரமல்ல அதைச் சொல்ல தேவனுக்குள் மிகுந்த தைரியம் கொண்டிருந்தனர். **தேவனுடைய ஊழியத்தை அனுகூலமற்ற சூழ்நிலையிலும் அவற்றை மேற்கொண்டு ஜெயமடைய தேவனுக்குள் தைரியமடைவது இன்றியமையாதது.** தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டது போல, நம்மை திடப்படுத்த யாரும் இல்லை (1 சாமு.30:6). நம்மை நாமே திடப்படுத்திக் கொள்ள நம் தேவனைத் தவிர நமக்கு யாரும் இல்லை. அதனால் தாவீது இழந்தவைகளை ஒன்றும் குறைவுபடாமல் திரும்ப அடைந்து கொண்டார். தேவனுக்கு முன்பாக நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கும்போது அவர் நமக்குத் திடமனதாயும் தைரியத்தையும் அருளுகிறார்.

பரிசுத்த பவுலும், அவரது உடன் ஊழியர்களும் பரிசுத்த **ஆவியானவரால் ஏவப்பட்டு பயமில்லாமல் பரிசுத்தத்தோடும், நீதியோடும் ஊழியம் செய்தனர்** (லூக்.1:71). தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக பயமில்லாமல் தைரியமாய் ஊழியம் செய்தனர். அவர்களுடைய தைரியம் பரிசுத்தமான தைரியமாயிருந்தது. அல்லது **பரிசுத்தமே அவர்களைத் தைரியமுடையவர்**

**களாக்கியிருந்தது.** ஊழியத்தில் அவர்களுக்கு அநேக பாடுகளும், நிந்தைகளும், வெகு போராட்டமும் உண்டாயிருந்தன. இவைகள் நடுவில் சோர்ந்து போகாமல் கர்த்தருடைய ஊழியத்தை தொய்வின்றித் தொடர்ந்தனர்.

நல்ல காரியங்களுக்காக பாடுகள் அனுபவிக்கும் போது நம்முடைய தீர்மானம் உறுதியாய் இருக்கும். நிந்தைகள், பாடுகள் மத்தியிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்கின்ற வாஞ்சையும் பரிசுத்த பவுலுக்குள் அதிகரித்தது. கஷ்டங்கள் மத்தியிலும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்கின்ற தீர்மானம் பரிசுத்த பவுலுக்குள் உறுதியாயிருந்தது. பாடுகள் பரிசுத்த பவுலை ஊழியத்தை விட்டு துரத்திவிடவில்லை. ''நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;'' என்று சொல்லத்தக்க மனஉறுதியோடிருந்திருக்கிறார் (2 கொரி.4:8).

இயேசு கிறிஸ்து ''மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடு ஜெபித்தார்'' (லூக்.22:44) என்று வாசிக்கிறோம். 'வியாகுலம்' என்பது ஒரு உச்சக்கட்ட வேதனை. ஆங்கிலத்தில் அச்சொல் Agony என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வேதனையைத்தான் சிறைச்சாலையில் கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்ட நிலையில், வேதனையின் உச்சகட்டத்திலும் பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி தேவனை துதித்துப் பாடினார்கள் என்று காண்கிறோம். (அப்.16:24,25). அச்சொல் ''அகோனியா'' Agonia என்ற கிரேக்க மூலமொழியிலிருந்து வந்ததாகும். அகோனியா என்ற சொல்லுக்கு ''போட்டி நடைபெறும் இடம்'' என்று மற்றுமொரு அர்த்தமுண்டு. போட்டி என்றாலே போராட்டம் நிறைந்ததுதான். கிறிஸ்தவ ஜீவியமும், ஊழியமும் ஒரு போராட்டமானது. நாம் எல்லாத் தடைகளையும் வென்று ஜெயம் பெற வேண்டும். முடிவில் கர்த்தர் நமக்கு ஜெயம் தருவார். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றவர்கள் பார்வையில் தோல்விபோல் தோன்றினாலும் அவர் மரணத்தை வென்று மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார். பவுலும், சீலாவும் செய்த ஜெபத்தால் சிறைச்சாலை அதிர்ந்தது, சிறைச்சாலைக் கதவுகள் திறந்தன. அதைத் தொடர்ந்து சிறை அதிகாரியின் குடும்பத்தினர் இரட்சிப்படைந்தது மாத்திரமல்ல அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஜெபத்தில் போராடுவது நித்திய ஜீவனுக்கும், மரணத்திற்கும் இடையில் உள்ள போராட்டம். இது ஒரு சாதாரண ஜெப அனுபவமல்ல போராடி ஜெபிக்கின்ற அனுபவம். இயேசு கிறிஸ்து வியாகுலப்பட்ட போது அல்லது உச்சகட்ட வேதனையை அனுபவித்த போது அவருடைய வியர்வை சுரபிகளில் இரத்தம் புகுந்தது. அவருடைய சரீரத்திலிருந்து சிவப்பு நிறத்தில் இரத்தம் கலந்த வியர்வை வடிந்தது. அது இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது.

ஆதி.32:24-32 வசனங்களில் யாக்கோபுடைய ஜெபம் விவரிக்கப்பட்டுள்ளது. அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான் என்று

ஓசியா கூறுகின்றார் (ஓசி.12:4). தேவதூதர்கள் அதிக பெலனையும் வல்லமையையும் உடையவர்கள் என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. ஆனால் தேவனுடைய தயை யாக்கோபிற்கு கிடைத்தது. தேவதூதன் தன் முழு வல்லமையையும் உபயோகிக்க தேவன் விடவில்லை. தேவ தூதர்களோடு ஒப்பிடும் போது மனிதர் பெலவீனரே (சங்.8:5). ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவனுடைய பிள்ளைகளுடைய ஜீவியத்தில் ரோ.8:26; 2 கொரி.12:9,10 வசனங்களின்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையைக் கொண்டும், பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டும் நாம் ஜெபத்தில் போராடுகின்றோம். நாம் தேவ தூதனோடல்ல, பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபத்தில் போராடுகின்றோம். ஆதி.32:31ல் தேவ தூதனோடு போராடி ஜெயம் பெற்றதின் அடையாளம் யாக்கோபின் சரீரத்தில் காணப்படுகின்றது. நாம் ஜெபத்தில் போராடும் போது கிறிஸ்து இயேசுவின் அச்சடையாளங்களை நம் சரீரத்தில் தரிக்கிறோம் (கலா.6:17). யாக்கோபின் விசுவாசத்தையும், போராடி ஜெபித்த ஜெபத்தையும் தேவன் கனம் பண்ணினார். அவனை ஆசீர்வதித்து ‘‘இஸ்ரவேல்’’ என்ற புதிய நாமத்தையும் கொடுத்தார்.

யாத்.32:10ல் கர்த்தர் மோசேயிடம் ‘‘நீ என்னை விட்டுவிடு’’ (‘‘என்னை நோக்கி ஜெபிப்பதை விட்டுவிடு’’ என்று கல்தேய மொழிபெயர்ப்பு வேதாகமம் சொல்லுகிறது) ஆனால் மோசே விடவில்லை. ஜெபத்தில் போராடினார். மோசேயுடைய விசுவாசத்தையும் விடாப்பிடியான, கருத்தான, ஜெபத்தையும் தேவன் கனம் பண்ணி ‘‘தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்’’ என்று காண்கிறோம் (வ.14).

நாமும் அனுகூலமற்ற சூழ்நிலையிலும் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய வேண்டும். அது வீணாக போகக்கூடாது. அதிக பலனுள்ளதாக இருக்க வேண்டும். அதற்கு ஒருமனதுடன் கருத்தாக, விடாப்பிடியாக போராடி ஜெபித்து ஜெயம் பெற வேண்டும். அப்போது வெளி.3:21ன்படி ஜெயங்கொண்டவர்களாக இயேசுவோடு சிங்காசனத்தில் காணப்படுவோம். கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.●

**வேர்ட் ஆஃப் கிரைஸ்ட் ஊழியங்களைத் தாங்கவிரும்புவோர் கவனத்திற்கு, எங்கள் SBI வங்கி எண்ணைப் பயன்படுத்தலாம்.**

**K. SELWYN THANGADURAI, A/C No: 101697 87024**

SBI, Arasaradi Branch, Madurai - IFSC Code: SBIN 0007482.

காணிக்கை அனுப்பிவிட்டு **9842143523**-க்கு தகவல் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். உங்களோடு நாங்கள் தொடர்புகொள்ள உங்களது தொலைபேசி எண்ணை மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்ணுக்கு தயவுசெய்து **SMS** மூலமாக எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். -**தொகுப்பாசிரியர்.**

17ம் பக்கத் தொடர்ச்சி..



Church of Santa Barbara in Llanera, Spain


Now... A Skating Centre


Kelvinside Parish Church in Glasgow, Scotland


Now... Event Centre & Night Club


St. Nicholas Church in Kyloe, England


Now... a Private Home


Selexyz Dominicanen in Maastricht, Netherlands


Today... a Book Store


St. John the Baptist in Pittsburgh, Pennsylvania


Today... a Pub






RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வேரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, கவிதா அனெக்ஸ், கான்வெண்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 06366826622

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805